## போட்டியின் சுருக்கம்:

''வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்பது பத்தாம் ஆண்டாக மாநில அளவில் நடத்தப்படும் புதிய அறிவியல் கண்டுப்பிடிப்பிற்கான போட்டி. சிறந்த இளம் விஞ்ஞானிகளை அடையாளம் காட்டும் மேடை இது. இப்போட்டி இரண்டு சுற்றுகளாக முதலில் மாவட்ட அளவிலும், அதில் வெற்றி பெறுபவர்களுக்கு இறுதிச்சுற்று மாநில அளவிலும் நடத்தப்படும். இரண்டு சுற்றுகளிலும் இளநிலை, முதுநிலை என இரண்டு பிரிவுகளாக போட்டி நடைபெறும்.

**பிரிவுகள்:**

- இளநிலை - 6 முதல் 8ம் வகுப்பு மாணவர்கள் பங்கு பெறலாம்.
- முதுநிலை - 9 முதல் 12ம் வகுப்பு மாணவர்கள் பங்கு பெறலாம்.

**கரு:** 1) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

( Examples : Drone, Internet over Thinking, Artificial Intelligence, Machine Learning, 5G and Big Data Analysis)

2) இயற்கை வளம் - பாதுகாப்பு

3) மக்களின் வாழ்க்கைக்கும் பாதுகாப்பிற்கும் உதவிகரமான கண்டுபிடிப்புகள்

மேற்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வுசெய்து செய்முறை விளக்கங்களுடன் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.

## வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023 விதிமுறைகள்

- ஒவ்வொரு குழுவிலும் அதிகபட்சமாக 2 மாணவர்கள் பங்குபெறலாம்.
- பதிவு செய்த மாணவர்கள் காலை 8 மணிக்கு முன்னதாகவே தங்கள் இருக்கையில் அமர வேண்டும்.
- மாணவர்கள் தங்கள் பள்ளி சீருடையில் தங்களுடைய அடையாள அட்டை அல்லது பள்ளி சான்றிதழ்களுடன் வர வேண்டும்.
- மாணவர்கள் தங்கள் மதிய உணவுடன் வரவும்.
- மேஜை மற்றும் நாற்காலிகள் வழங்கப்படும். இதர தேவைகளான மின்சார இணைப்புகள் பற்றி தகவல்களை முன் கூட்டியே எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
- புதுமையான மற்றும் சோதனை அடிப்படையில் உள்ள செயல்முறை விளக்கங்கள் தரும் மாணவர்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும்.
- இப்போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும், கலந்துக்கொள்ளும் அனைத்து பள்ளிகளுக்கும் நினைவுப்பரிசு வழங்கப்படும்.
- மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கமும், கோப்பைகளும் வழங்கப்படும்.
- வெற்றி பெற்ற பள்ளிக்கு மாவட்ட கோப்பை வழங்கப்படும்.
- மாவட்ட அளவில் இளநிலை மற்றும் முதுநிலை பிரிவுகளில் முதல் பரிசு பெறும் குழுக்கள் மட்டும் தமிழ்நாடு அளவில் நடக்கும் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர், அவர்களுக்கு தங்கும் வசதிகள் செய்யப்படும்.
- தமிழ்நாடு அளவில் நடக்கும் இறுதிப் போட்டி மிகப் பிரம்மாண்டமாக நடைபெறும்.
- தமிழக அளவில் முதலாவது இடத்தைப் பெறும் இளநிலை மற்றும் முதுதிலை குழுக்களுக்கு தலா 50,000/- ரொக்கப் பரிசு வழங்கப்படும்.
- தமிழக அளவில் இரண்டாவது இடத்தைப் பெறும் இளநிலை மற்றும் முதுநிலை குழுக்களுக்கு தலா 25,000/- ரொக்கப் பரிசு வழங்கப்படும்.
- தமிழக அளவில் மூன்றாவது இடத்தைப் பெறும் இளநிலை மற்றும் முதுநிலை குழுக்களுக்கு தலா 15,000/- ரொக்கப் பரிசு வழங்கப்படும்.
- நடுவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களின் தீர்ப்பே இறுதியானது.

**Puthiya Thalaimurai Events**

New Generation Media Corporation Private Limited
No. 25A, N.P. Industrial Estate, Ekkattuthangal Chennai-600 032
Ph: 044 - 4596 9501 / 502 / 504
Web: www.puthiyathalaimurai.com / e-mail: events@newgenmedia.in